பக்கங்கள்: எட்டு

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 தை 09 புதன்கிழமை (22-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 56


# இலங்கை அரசு பிரபாவுடன் பேச இந்தியா தடையாக இருக்கமாட்டாது

## கொழும்புக் கூட்டத்தில் குஜ்ரால்

**கொழும்பு, ஜனவரி 22**

**இனப்பிரச்சினையைத் தீர்க்கும் பொருட்டு, இலங்கை அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தினால், இந்தியா அதற்குத் தடையாக இருக்கமாட்டாது.**

**பிரபாகரன் இந்தியாவால் தேடப்படும் ஒருவராக இருந்த போதிலும், இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையிடமாட்டாது.**

இவ்வாறு நேற்றுத் தெரிவித்தார் இலங்கை வந்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால்.

கொழும்பு, பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ''இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை'' என்னும் பொருளில் குஜ்ரால் உரையாற்றினார்.

கூட்டத்திற்கு மூத்த பத்

(7ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



விமானங்களுக்குப் போதாத காலம் போல இருக்குப் பாருங்கோ...... !

## 5 தமிழ் அரசியல் கட்சிகள் நேற்று குஜ்ராலைச் சந்தித்தன

### இந்தியா தலையிடக் கோரிக்கை

லண்டன், ஜன. 22

இலங்கை வந்துள்ள வெளியுறவு அமைச்சர் இந்திரகுமார் குஜ்ராலை 5 தமிழ் அரசியல் கட்சிகள் நேற்று மாலை சந்தித்துப் பேசின.

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு இந்தியா முழு அளவில் தலையிட்டு ஒரு தீர்வைக்காண உதவ வேண்டும் என்று தமிழ்க் கட்சிகள் கோரின.

இக்கட்சித் தலைவர்கள் கூறியவற்றைச் செவிமடுத்த குஜ்ரால், தற்போதைய நிலைமையில் இந்தியாவினால் மனிதாபிமான ரீதியில் மட்டுமே உதவமுடியும் என்று பதிலளித்தார்.

உணவுப் பொருள் விநியோகம், புனரமைப்பு நடவடிக்கைகள் போன்றவற்

(7 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் பயணிகளுக்கு

திருகோணமலையில் இருந்து நாளை காங்கேசன்துறைக்கு வரும் பயணிகள் கப்பல் நாளையே ஒரு தொகுதி பயணிகளை ஏற்றிக் கொண்டு திருகோணமலைக்குத் திரும்பும்.

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பெயர் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கிபிர் விமானம் வாவியில் விழுந்தது

### நீர்கொழும்பில் நேற்றுச் சம்பவம்

கொழும்பு, ஜனவரி 22

ஸ்ரீலங்கா விமானப் படைக்குச் சொந்தமான இஸ்ரேல் தயாரிப்பு ''கிபிர்'' ஜெட் விமானம் ஒன்று நேற்று மாலை நீர்கொழும்பு வாவியில் வீழ்ந்தது.

விமானமோட்டி விமானத்திலிருந்து குதித்து உயிர் தப்பிக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுப் பிற்பகல் 4-50 மணிக்கு இச்சம்பவம் இடம் பெற்றது.

வானில் சத்தம் கேட்டதைத் தொடர்ந்து விமானம் நீர்கொழும்பு வாவியில் விழுந்ததாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

விமானத்தின் சிதறுண்ட பாகங்கள் நீர்கொழும்பு வாவியில் காணப்பட்டன.

கட்டுநாயக்காவிலிருந்து புறப்பட்டு சிறிது நேரத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது.

உயர் தொழில்நுட்பம் கொண்ட இந்த விமானம் வீழ்ந்ததுக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஒரு வார காலத்தில் இலங்கை விமானப்படை மூன்றாவது விமானத்தை இழந்துள்ளது.

(இ-3-5-10)

## வை-12 ரக விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதா?

### படை அதிகாரிகள் சந்தேகம்

கொழும்பு, ஜன. 22

'பலாலியில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்டு காணாமற் போன வை-12 ரக போக்குவரத்து விமானத்தை ஆயுதங்களுடன் வந்ததாகக் கருதப்படும் கப்பலில் இருந்து தீவிரவாதிகள் ஏவுகணை அல்லது துப்பாக்கியால் சுட்டிருக்கலாம் என்பதை மறுக்க முடியாது'

இப்படி விமானப்படை அதிகாரிகள் தெரிவித்ததாக ''த ஐலண்ட்'' பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

விமானம் வீழ்ந்த விடயத்தில் சதிச் செயல் எதுவும் இருக்கலாம் என்ற சாத்தியத்தை நிராகரிக்க முடியாது என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

5 வருடங்களுக்கு முன்னர் சீனாவிடம் இருந்து வை – 12 ரக விமானங்கள் வாங்கப்பட்டன. இத்தகைய விமானம் காணாமற் போயுள்ளமை இதுவே முதற் தடவையாகும்.

94 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதிக்கு பின்னர் விமானப் படை கிட்டத்தட்ட 10 வானூர்திகளை இழந்துள்ளது.

ஏ. என். 32 ரக விமானங்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை; பொஸ்கோவில் அதிக மாணவர்சித்தி

யாழ்ப்பாணம், ஜன. 22

கடந்த செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளின் யாழ். மாவட்டப் பெறுபேறுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் வெளியாகின.

கொழும்பில் நேற்று முன்தினம் வெளியான இந்தப் பரீட்சை முடிவுகள் விமான மூலம் நேற்று இங்கு எடுத்து வரப்பட்டன.

நேற்று வெளியான பரீட்சை முடிவுகளின்படி யாழ். நகரப் பாடசாலைகளில் சிலவற்றின் பெறுபேறுகள் முந்திக் கிடைத்தன.

அப்பாடசாலைகளிலிருந்து பரீட்சையில் சித்தியடைந்தோர் எண்ணிக்கை வருமாறு:-

★ சென். ஜோண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் ஏழு படையினர் பலி

கொழும்பு, ஜன. 22

மட்டக்களப்பு மாவட்டம் பேத்தாளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் ஒன்றில் ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.

படையினர் ரோந்துப் பணியை முடித்துக் கொண்டு முகாம் திரும்பிக் கொண்டிருந்த போது புலிகள் வழிமறித்துத் தாக்கினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த படையினர் பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த மோதலில் புலிகள் இயக்கத்துக்கும் பலத்த சேதம் ஏற்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3-5)

## நிம்மதி - நிரந்தர அமைதிக்கு பதிலாக கைது-காணாது போதல் அதிகரிப்பு

### இடைக்கால நிர்வாகசபையே தீர்வு என்கிறது ஈ. பி. டி. பி.

யாழ்ப்பாணம், ஜன. 22

நிம்மதி, நிரந்தர அமைதி தேடியே மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். ஆனால் கைதாகும் — காணாமற் போகும் சம்பவங்களே அதிகரித்துள்ளன. இடைக்கால நிர்வாக சபை மூலமே மக்களின் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியும்.

ஈழமக்கள் ஜனநாய[illegible]யின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கே. வி. கே. ஜெகன் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு:

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிரான் பகுதியிலும் மோதல்

கொழும்பு, ஜன. 22

மட்டக்களப்பு மாவட்டம் கிரான் பகுதியில் நேற்று முன்தினம் மாலை புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மற்றும் ஒரு மோதல் சம்பவம் இடம்பெற்றது.

இதில் படையினர் ஒருவர் கொல்லப்பட்டதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது. (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யூனிவேர்சல்

கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

**G. C. E. (A/L)**

தமிழ்:- திரு. தங்கராஜா B. A. (Dip. in Ed.)

**ஆரம்பம்: 23-01-1997 வியாழன்**

97 A/L — வினா விடை
காலை 7-30 — 8-30
98 A/L — காலை 8-30 — 9-30
99 A/L — காலை 9-30 — 10-30
97 A/L — காலை 10-30 — 11-30

(44819)

யா/மானிப்பாய்

## இந்துக் கல்லூரியிலிருந்து க. பொ. த. (உ/த) 1995

பெறுபேற்றின் அடிப்படையில்
பல்கலைக்கழக அனுமதி பெற்றோர்

1. ஞா. சக்திகுமார் — பொறியியல் I
2. இ. வசீகரன் — பொறியியல் I
3. சி. பத்மசீலன் — பௌதிக விஞ்ஞானம்
4. செ. சுரேந்திரன் — பௌதிக விஞ்ஞானம்
5. தி. சிவகுமார் — மிருக வைத்தியம்
6. நா. நவதாசன் — முகாமைத்துவம் I
7. பா. ரூபன் — முகாமைத்துவம் I
8. மு. விக்னேஸ்வரன் — முகாமைத்துவம் II
9. சி. திருக்குமரன் — முகாமைத்துவம் II
10. ச. யோகராசா — முகாமைத்துவம் II

மாணவர், அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள்,
அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

**பெற்றோர், பழைய மாணவர்கள்.**

(44814)

## 7 ஆம் நாள் ஆத்மசாந்தி திருப்பலி

### அங்தோனிப்பிள்ளை சிறீசெல்வன்

(தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை, யாழ்ப்பாணம்.)

17-01-1997இல் காலமான அந்தோனிப்பிள்ளை சிறீசெல்வனின் 7 ஆம் நாள் ஆத்ம சாந்தித் திருப்பலி புனித நீக்கிலார் ஆலயத்தில் (நாவாந்துறை), 23-1-97 வியாழக்கிழமை காலை 6–30மணிக்கு நனடபெறும். இதில் கலந்து கொண்டு மதியம் நடைபெறும் போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சக ஊழியர்களையும் நண்பர்களையும் அன்னாரின் இறுதிக் கிரியையில், கலந்து கொண்ட ஏனையோரையும் வேண்டுகின்றோம்.

தகவல்:
அ. சத்தியசீலன் (சகோதரன்)
(மக்கள் வங்கி, கன்னாதிட்டி)

(9190)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்: 23 — 06 — 1925



ஆண்டவன் அடியில்: 05 — 02 — 1993

அமரர்

### வேலுப்பிள்ளை முத்துக்கிருஷ்ணர்

**(மாயவர்)**

ஐயா!

வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட எங்கள் அன்புத் தெய்வமே! நீர் எம்மையெல்லாம் விட்டுச் சென்று ஆண்டுகள் நான்கு உருண்டோடி விட்டனவே. ஆனாலும் எம் மனதில் ஆறவில்லை இத்துயரம். அனுதினமும் உம் நினைவில் வாழுகின்றோம் அவனியிலே!

உங்கள் பிரிவால் வாடும்;-
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

காளிகோயிலடி,
மல்லாகம்.

(சி/3971)

## மரணதண்டனை

யாழ்ப்பாணம். ஜன, 22

கடந்த சனியன்று மாலை பருத்தித்துறை வி. எம். வீதிப் பகுதியில் சுட்டுக் கொல்லப்பட்ட கிருஷ்ண பிள்ளை கிருஷ்ணகுமார் (வயது 45) என்பவருக்கு விடுதலைப் புலிகளே மரண தண்டனை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இராணுவ உளவுப்பிரிவுடன் இவர் தொடர்பு வைத்திருந்ததால் புலிகள் இவருக்கு மரண தண்டனை நிறைவேற்றியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இவரது சொந்த இடம் வல்வெட்டித்துறை ஆகும்.

(உ)

**A/L 99**
**Pure/App.**

ஆரம்பம்: 24-01-1997
வெள்ளி பி.ப. 3-30 மணி

**A/L 98,99**
கிறிஸ்தவம்
Mrs A. மல்லிகா B A.

**SHAMROCK**
யா/ ஈச்சமோட்டை வீதி.

(44816)

# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

**G.C.E. (A/L)**

இந்துநாகரிகம்
சிவ. மகாலிங்கம் B.A. (Dip.inEd.)

ஆரம்பம்: 23-01-1997
வியாழக்கிழமை

97 A/L வினா-விடை
காலை 6-30 — 7-30

98 A/L
காலை 7-30 — 8-30

99 A/L
காலை 8-30 — 9-30

(44821)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், இலங்கை.

## அறிவித்தல்

### விஞ்ஞானபீடம்

23 - 01 - 1997 அன்று நடைபெறவிருந்த விஞ்ஞானபீட பின்வரும் பரீட்சைகள் யாவும் 25-01-1997 க்குப் பிற் போடப்பட்டுள்ளன.

1. முதலாம் ஆண்டு முதலாம் அரையாண்டுப் பரீட்சை -- 1995
   9-00 — 11-00 CHG 11 General Chemistry & Inorganic Chemistry I
2. முதலாம் ஆண்டு இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை -- 1994
   CHG
   9-00—11-00 CHG13 Organic Chemistry I
   9-00 —12-00 CG 16 Physical Chemistry I & Organic Chemistry I (Oid Syllabus)

- பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
1997-01-21.

(சி/3970)

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆண்டு ஆறு (6) அனுமதி-1997

மேற்படி பாடசாலைகளில் 1997 இல் ஆண்டு 6 வகுப்பில், கடந்த 1996 செப்ரம்பர் மாதத்தில் நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

அனுமதி கோரும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை, உரிய கல்லூரி அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவத்தை ரூபா 15/- செலுத்திப் பெற்று விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து உரிய கல்லூரி அலுவலகத்தில் 29 - 01 - 97 புதன் கிழமைக்கு முன்னதாக ஒப்படைக்கவும்.

அதிபர்
யாழ். இந்துக்கல்லூரி.

அதிபர்
வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

(சி/3973) 97 – 01 – 21.

# மரண அறிவித்தல்கள்

## தோமஸ் செபஸ்ரியாம்பிள்ளை

(செல்வரெட்ணம்)

(இளைப்பாறிய ஆசிரியர், மாதகல் சென்ஜோசப் ம. வி., மாரீசன்கூடல் றோ. க. த. க. வித்தியாலயம்)

மாதகலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான தோமஸ் செபஸ்ரியாம்பிள்ளை 20-01-97 இல் காலமானார்.

இவர் சந்தானா இன்னேசத்தின் (செல்வக்கண்மணி - இளைப்பாறிய ஆசிரியை, மாதகல் சென் தோமஸ் பெண்கள் பாடசாலை) அன்புக் கணவரும் செல்வமலர் றெக்ஸ் ஸ்ரீபன் (ஆசிரியை — Ikra International School, Kolpitty), செல்வறாஜி (ஆசிரியை — வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), செல்வநேசம் ஸ்ரனிஸ்லோஸ் (முன்னாள் ஆசிரியை — மாதகல் சென்ஜோசப் ம. வி., லண்டன்), செல்வப் பிறேமா (ஆசிரியை, இளவாலை கன்னியர் மடம் ம. வி.) செல்வநிலா (எழுதுவினைஞர், கோட்டக்கல்வி அலுவலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையும், றெக்ஸ் ஸ்ரீபன் (ஆசிரியர்—கொழும்பு), ஸ்ரனிஸ்லோஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டவ்னி, சொவ்னி, பிஜோஜன் ஆகியோரின் அருமைப் பேரனும், பேதுருப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான அன்ரனி பெர்னாண்டோ (முன்னாள் பிரதம எழுதுவினைஞர் — சம்பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), அடைக்கலசாமி, இசிதோர், ஞானப்பிரகாசம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், பிரான்சிஸ், (ஆசிரியர் — சம்பத்திரிசியார் கல்லூரி), ஜெயசீலன் (மறை ஆசிரியர்), சேவியதாசன் (ஆசிரியர், — மண்டைதீவு றோ. க. பாடசாலை, யாழ். பல்கலைக்கழகம் விஞ்ஞான பீடம், 2 ஆம் வருடம்), அருட்திரு பெனற் (பங்குத்தந்தை — கரவெட்டி) ஆகியோரின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22 - 01 - 97) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு (புதிய நேரம்) யாழ். மரியன்னை பேராலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின் மரியன்னை பேராலய சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்;
ச. இ. செபஸ்ரியாம்பிள்ளை
(மனைவி) பிள்ளைகள்

321/7, கதீற்றல் லேன்,
யாழ்ப்பாணம்.

(44808)

திருமதி

## கந்தையா தெய்வானைப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை)

''பத்மஹரி'', மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி கந்தையா தெய்வானைப்பிள்ளை 20 - 01 - 1997 திங்கட்கிழமை காலை உடுப்பிட்டியில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கந்தையாவின் (கொல்லன் கலட்டி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கைலயங்கிரிச் செல்வம் (நிருபர்– இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்), டாக்டர் பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தாயாரும், இரதிதேவியின் வளர்ப்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான வ. சபாபதி (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் சிறு கைத்தொழில் திணைக்களம், யாழ்ப்பாணம்), திருமதி சின்னையா தங்கம்மா ஆகியோரின் மைத்துனியும், திருமதி கை. வள்ளிப்பிள்ளை (ஆசிரியை, உடுப்பிட்டி அமெரிக்கன் ஆண்கள் பாடசாலை), திருமதி ப. செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், கௌரிபாலன், மகிழினி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20 - 01 - 1997 மாலை உடுப்பிட்டி எள்ளன்குளம் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
திருமதி ச. இராதாக்கிருஷ்ணன்
(பெறாமகள்)

தற்போதைய முகவரி:
திருலாதணி, இமையாணன் வடக்கு,
உடுப்பிட்டி.

(44811)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றுமுழுதான சுமுக நிலையை ஏற்படுத்த தவறிய யாழ்ப்பாண, கிளிநொச்சி வெற்றிகள்

**கொழும்பிலிருந்து வெளியாகும் "தினமுரசு" வார இதழில் "கிழக்கில் றிவிஜெயவுடன் ஆரம்பமாகியுள்ள 97" என்ற தலைப்பில் "இராஜதந்திரி" எழுதிய அரசியல் கட்டுரை இங்கு மறுபிரசுரஞ் செய்யப்படுகிறது.**

"றிவிஜெய" என்ற இராணுவ நடவடிக்கையுடனேயே 1997 ஆம் ஆண்டு உதயமாகியது.

கிழக்கிலங்கைக் காடுகளில் புலிகளின் நிலைகளை ஊடுருவித் தாக்குவதே இந்த இராணுவநடவடிக்கையின் நோக்கமாகும் என்று பாதுகாப்புப் படைவட்டாரங்கள் தெரிவித்திருந்தன.

கடந்த ஆண்டின் முற்பகுதியில் வடக்கே இராணுவம் குறிப்பிடத்தக்க வெற்றிகள் சிலவற்றை எட்டியிருந்தது.

அவ்வெற்றிகளில் யாழ். குடாநாட்டை முற்றுமுழுதாகத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தமை முக்கியமானது.

ஆயினும் கடந்த ஆண்டின் நடுப்பகுதியிலும், இறுதிப் பகுதியிலும் புலிகள் நடத்திய தாக்குதல்கள் ஆயுதப்படையினரைத் திக்குமுக்காட வைத்திருந்தன. அத்துடன் புலிகளினது பலம் தொடர்ந்து கணிசமானதாக இருப்பதையும் வெளிப்படுத்தி இருந்தது.

வடகிழக்குப் பிரதேசமான முல்லைத்தீவில் புலிகள் நடத்திய தாக்குதல் இராணுவத்தினரது முகாமொன்றையே முழுமையாக நிர்மூலமாக்கி விட்டிருந்தது.

இங்கிருந்த படையினரில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர். பெருமளவு பெறுமதிமிக்க ஆயுத தளபாடங்கள் புலிகளால் அள்ளிச் செல்லப்பட்டன.

இதனையடுத்து, வடக்கிலும் கிழக்கிலும் சிறிதும் பெரிதுமாகப் பல தாக்குதல்கள் கடந்த ஆண்டின் நடுப் பகுதிக்குப் பின்னர் புலிகளினால் மேற்கொள்ளப்பட்டன.

இறுதியாக கடந்த டிசம்பர் மாதம் கிழக்கில் புளுக்குனாவ என்ற இடத்தில் விசேட அதிரடிப்படையினரது முகாமொன்றை நிர்மூலமாக்கி அங்கிருந்த சுமார் 50 படையினரையும் விடுதலைப்புலிகள் வேட்டையாடியிருந்தனர்.

தொடர்ந்து கிழக்கில் அதிரடிப் படையினருக்குப் பொறுப்பாகவிருந்த உடாலி சஹபந்து என்ற சிரேஷ்ட அதிகாரி ஒருவரும் புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

கிழக்கில் புளுக்குனாவ முகாம்மீதும், அதிரடிப் படைத் தளபதி மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களே] இந்த ஆண்டின் ஆரம்பத்தில் "றிவிஜெய" என்ற இராணுவ நடவடிக்கையை கிழக்கில் உதயமாக்கி விட்டிருந்தது.

கடந்த ஆண்டின் ஆரம்பப் பகுதியில் வடக்கே யாழ். குடாநாட்டையும், பின்னர் கிளிநொச்சிப் பிரதேசத்தையும் கைப்பற்றுவதையே ஆயுதப்படையினர் இலக்காகக் கொண்டிருந்தனர்.

இதன் பொருட்டு தமது பலமனைத்தையும் படையினர் வடக்கே ஒன்றுதிரட்டியிருந்தனர். கிழக்கிலிருந்துகூட பெருமளவில் படையினர் வடக்கிற்குக் கொண்டு செல்லப்பட்டு 'ஒப்பரேசன் சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டனர். முதலில் புலிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட யாழ்ப்பாணத்தை கைப்பற்றுவது; அதன் பின்னர் ஏனையவற்றைக் கவனித்துக் கொள்வது என்ற ரீதியிலேயே ஆயுதப்படையினரது செயற்பாடுகள் விளங்கியிருந்தன.

**நிலைத்து நிற்க ஆட்பலம் தேவை**

வடக்கே படையினரைக் கொண்டுசென்று குவிக்கும் விதத்தில் கிழக்கிலிருந்து முகாம்கள் பலவும் வாபஸ் பெறப்பட்டன.

வடபகுதி இராணுவ நடவடிக்கைகள் படையினரைப் பொறுத்தவரை எதிர்பார்த்த வெற்றியை வழங்கியிருந்தது. ஆயினும் அங்கு நீடித்து நிலைத்திருப்பதற்குக் கணிசமான அளவில் ஆட்பலம் தேவைப்பட்டிருந்தது.

கிழக்கிலிருந்து கொண்டு செல்லப்பட்டவர்கள் தவிர மேலும் அதிகமானோரைப் படைகளில் சேர்க்க வேண்டிய நிர்ப்பந்தமும் அரசுக்கு ஏற்பட்டது.

**கிழக்கில் தொய்வு நிலை**

இந்நிலையில் கிழக்கிலங்கையில், ஆயுதப்படையினரது நடமாட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு தொய்வு நிலையே காணப்பட்டது. இத் தொய்வு நிலையை நன்கு சாதகமாகப் பயன்படுத்தியே புலிகள் கடந்த ஆண்டின் நடுப் பகுதியிலும், இறுதிப்பகுதியிலும் கிழக்கில் வெற்றிகரமான தாக்குதல்கள் சிலவற்றை மேற்கொண்டிருந்தனர்.

இத்தாக்குதல்களைத் தொடர்ந்தே கிழக்கில் தம்மை மீண்டும் பலப்படுத்தும் வகையில் ஆயுதப்படையினர் இந்த ஆண்டின் ஆரம்பத்தில் "றிவி ஜெய" இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியிருந்தனர்.

1994ஆம் ஆண்டில் சந்திரிகா அரசு பதவிக்கு வந்தது.

தொடர்ந்து 1995ஆம், 1996ஆம் ஆண்டுகள் பெரிதும் மோதல்கள் நிறைந்தவையாகவே இருந்தன.

இராணுவ ரீதியாகவே தம்மைப் பெரிதும் கட்டி எழுப்பியிருந்த விடுதலைப் புலிகளின் பலத்தை நசுக்கி தமது கையை மேலோங்கச் செய்வதே சந்திரிகா அரசின் நோக்கமாக இருந்துள்ளது.

புலிகளின் கோட்டையாகவும் தளமாகவுமிருந்த யாழ்ப்பாணக் குடாநாடு, கிளிநொச்சி என்பவற்றைக் கைப்பற்றியதன் மூலம் சந்திரிகா அரசு புலிகளை வெகுதூரம் விரட்டியிருக்கலாம்.

ஆனால் அதன் மூலம் ஒரு முற்றுமுழுதான சுமுகநிலையைத் தோற்றுவித்திருப்பதாகக் கொள்வதற்கில்லை. ★

# கொக்குவில் சம்பவத்தில் 2 இராணுவத்தினர் பலி

கொக்குவிலில் சந்தியில் நேற்று முன்தினம் முற்பகல் 11-00 மணிக்கு தாம் நடத்திய தாக்குதலில் இராணுவ விசேட படைப் பிரிவைச் சேர்ந்த இரு படையினர் கொல்லப்பட்டதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர்.

இத்தாக்குதலின் போது இராணுவத்தினரின் மோட்டார் சைக்கிள் ஒன்று தங்களால் கைப்பற்றப்பட்டு தீயிட்டுக் கொழுத்தப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் அறிவித்தனர். (உ)

# கொழும்பில் நடைபெற்ற விவேகானந்தர் விழா

கொழும்பு, ஜன. 22

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டுவிழா கடந்த புதன்கிழமை கொட்டாஞ்சேனை விவேகானந்த சபையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த வைபவத்தில் சுவாமி விவேகானந்தரது ஆளுயர உருவச்சிலையை இந்திய இராமகிருஷ்ண மடம் மற்றும் இராமகிருஷ்ணமிஷன் ஆகியவற்றின் பிரதித்தலைவர் சுவாமி இரங்கநாத நந்தாஜி திறந்துவைத்து உரையாற்றினார்.

வைபவத்தில் கலந்து கொண்ட தபால் தொலைத்தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர விவேகானந்தரின் உருவப்படம் பொறித்த சிறப்பு முத்திரையையும், தபாலட்டையையும் வெளியிட்டு வைத்தார்.

முதல்நாள் முத்திரை உறையை சுவாமி இரங்கநாத நந்தாஜி தபால் தொலைத்தொடர்பு அமைச்சரிடம் பெற்றுக்கொண்டார்.

இவ்வைபவத்தில் இந்திய உயர்ஸ்தானிகர் நரேஷ்வர் தயாள் சென்னை இராமகிருஷ்ணமடத்தின் தலைவர் சுவாமி கௌதமநந்தாஜீ கொழும்பு மாநகர மேயர் கே. கணேசலிங்கம் ஆகியோர் உரையாற்றினார்ள்க.

கிராமிய கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான், கலாசாரசமய அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் ஜெயக்கொடி ஆகியோர் கலந்துகொள்ளாத போதிலும் அவர்களது உரைகள் அங்கு வாசிக்கப்பட்டன.

பலத்த பாதுகாப்பின் மத்தியில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா வருகைதர ஏற்பாடகியிருந்த போதிலும் அவர் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.


தாவடி

ஸ்ரீ அம்பலவாண கந்தசுவாமி கோயில்

சித்திரத்தேர் திருப்பணி

பவளக்கால் நாட்டும் வைபவம்

நாளை தைப்பூசத் திருநாள் (23 - 01 - 1997) வியாழக்கிழமை காலை 8 45 மணி தொடக்கம் 9. 45 மணி வரை.

நிகழ்ச்சி ஒழுங்கு:

காலை 7. 36 மணி — விசேடஅபிடேகம், பூசை.
காலை 9. 45 மணிக்குள் — பவளக்கால் நாட்டும் - வைபவம் நிறைவு.

அராலியூர் ஸ்தபதியார் திட்ப, நுட்ப, சிற்ப கலாமணி
விஸ்வப்பிரம்ம ஸ்ரீ சின்னத்தம்பி அமரசிங்கம் அவர்கள்
தமது குழுவினரின் அனுசரணையுடன் பவளக்கால் நாட்டும் வைபவத்தை கிரியா பூர்வமாக நடத்தி வைப்பார்கள்.

ஆசியுரை : மாவை ஆதீன உதவி சிவாச்சாரியார்.
சிவஸ்ரீ து. சுந்தரமூர்த்திக் குருக்கள், B. A. அவர்கள்.
சிறப்புரை: உயர்திரு. ஆ. மகாலிங்கம் S.L.A.S. அவர்கள் (இந்து சமய விவகார மாவட்ட உதவி ஆணையாளர்).

அடியார்களை ஆலயத்திற்கு வருகை தந்து இத் தெய்வீக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் வேண்டிக் கொள்கிறோம்.

ஆலய திருத்தேர் திருப்பணிச் சபை
(44790)



முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 03 — 10 — 1922
மறைவு: 03 — 02 — 1996

அமரர்
திருமதி வைத்திலிங்கம் யோகம்மா
திதி: 22 - 01 - 1997

ஆண்டொன்றுமறைந்தாலும் ஆறவில்லைஎம் மனது
ஈண்டு உம் நினைவு எம் நெஞ்சைவிட்டகலாது
மாண்டு போனீரோ பேதை நெஞ்சம் ஆறிடுமோ?
காண்போமோ இனி உம்மை, கண்ணீர்தான் காணிக்கை!

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தகவல்: கனகரத்தினம் கலாவதி,
441, கண்டி வீதி, அரியாலை.
(44803)



31 ஆம் நாள் நினைவஞ்சலி
பிரார்த்தனை அழைப்பும்
நன்றி நவிலலும்

அமரர் அ. மரியாம்பிள்ளை

24 - 12 - 96 இல் காலமான எமது அன்புத் தந்தை அ. மரியாம்பிள்ளை அவர்களின் மறைவினையொட்டி அனுதாபமும் ஆறுதலும் வழங்கிய அனைவருக்கும் நன்றி நவில்வதோடு 23 - 01 - 1997 வியாழக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் 31 ஆம் நாள் நினைவஞ்சலிப் பிரார்த்தனையிலும், மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மரியாம்பிள்ளை குடும்பத்தினர்.
(திருமதி பிலோமினா, ஆஞ்சலோ, ஜீவரட்னம்)

225, தும்பளை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை.
(சி-3967)



பதவி வெற்றிடம்

தென்னிந்திய திருச்சபை
யாழ்ப்பாண அத்தியட்சாதீனம்

மேற்படி நிறுவனத்தில் பணிபுரிய அனுபவமுள்ள ஒரு ஆங்கில தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் தேவைப்படுகின்றார்.


இரண்டு நற்சான்றிதழ்களுடன் 07 - 02 - 1997 வெள்ளிக்கிழமைக்கு முன்னர்.

செயலாளர்,
தென்னிந்திய திருச்சபை காரியாலயம்,
வட்டுக்கோட்டை என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்குக.
(சி-3964)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு: 08 — 01 — 1923



உதிர்வு: 08 — 01 — 1997

அமரர்
## பொன்னையா நவரத்தினசிங்கம்
( உரிமையாளர்: யாழ். தேவி ரான்ஸ்போட் சேவிஸ்)

08 - 01 - 1997 அன்று மீளாத் துயரில் எமை ஆழ்த்தி விட்டுப் பிரிந்த எமது அன்புக்குரியவர் நோயுற்ற காலத்திலும், அவரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்டும், பல்வேறு வகையிலும் உதவிய உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இன்று (22 - 01 - 1997) நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளும்படி வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்.

புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு.
( 44815)

# செய்தியாளர்கள்

பின்வரும் இடங்களுக்கு உதயன் பத்திரிகையின் **செய்தியாளர்கள்** நியமிக்கப்படவுள்ளனர். சம்பவங்கள், மக்களின் சமூகப் பிரச்சினைகள், கஷ்டங்கள், அவலங்கள் போன்றவற்றை நேரில் சென்று திரட்டித் தரக்கூடிய — துடிப்புமிக்க — பத்திரிகைத் துறையில் ஈடுபாடுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

| | |
|---|---|
| ★ நாவாந்துறை | ★ கொக்குவில் |
| ★ இணுவில் | ★ சுன்னாகம் |
| ★ மல்லாகம் | ★ புன்னாலைக்கட்டுவன் |
| ★ வட்டுக்கோட்டை | ★ மூளாய் |
| ★ சங்கானை | ★ இளவாலை |
| ★ அளவெட்டி | ★ கோப்பாய் |
| ★ நீர்வேலி | ★ வல்வெட்டித்துறை |
| ★ கரவெட்டி | ★ அரியாலை |
| ★ கைதடி | ★ கொடிகாமம் |
| ★ வரணி | ★ ஊர்காவற்றுறை |
| ★ காரைநகர் | ★ வேலணை |

விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் நிரந்தரமாக வதிபவராக இருத்தல் அவசியம். தமிழில் சிறந்த தேர்ச்சி பெற்றிருப்பதுடன் ஆங்கிலம், சிங்களம், எழுதப் பேசத் தெரிந்திருப்பது மேலதிக தகுதியாகக் கொள்ளப்படும்.

தமது பிரதேசத்தில் தம்மை சிபாரிசு செய்யக் கூடிய இரண்டு பிரமுகர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு 25 - 01 - 1997 இற்கு முன்னர் விண்ணப்பங்களைக் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

செய்தி ஆசிரியர்,
'உதயன்'
யாழ்ப்பாணம்.

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 11—09—1916

மறைவு: 22—01—1996

திருமதி
## அருட்குணமணி சின்னத்தம்பி
**(குணமணி அக்கா)**
( கரவெட்டி கிழக்கு, கோயிற் சந்தையடி )

அறவழி நின்று பணி செய்தவளே;
இசுவாழ்வை நிறைவாக்கி மறைந்தவளே!
உற்றோர்க்கு சோகம் தந்தோடினையோ
இறையடி உயர்வெய்தல் நிச்சயமே!

சகோதரர்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சறோ சத்தியானந்தன்,
45, றக்கா ஒழுங்கை,
சுண்டுக்குளி.
(44809)

புலிகள் - இலங்கை அரச தரப்பினர்

# பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க தமிழக அமைப்புக்கள் கோரிக்கை

## மாநில, மத்திய அரசுகளுக்கு மகஜர்

சென்னை, ஜன. 22

இலங்கையின் யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கையை தமிழக மற்றும் மத்திய அரசுகளிடம் தமிழகத்தில் உள்ள 35 அமைப்புக்கள் விடுத்துள்ளன.

பாரதீயஜனதா, பாட்டாளி மக்கள் கட்சி, தமிழ் நாடு ஜனதாதளம், எம். ஜி. ஆர். திராவிட முன்னேற்றக் கழகம், அறிவியற் பேரவை, மார்க்ஸிய பெரியார் பொது உடைமைக் கட்சி, அம்பேத்கார் மக்கள் இயக்கம், உலகத் தமிழர் பேரவை, அண்ணா தி.மு.க., தமிழ் மாநில காங்கிரஸ் உட்பட 35 அமைப்புப் பிரதிநிதிகள் கையொப்பமிட்டு அனுப்பிய மகஜரிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மகஜரில் கோரப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும், பிறதொண்டு நிறுவனங்களும் ஈழத் தமிழர் வாழ்விடங்களில் துன்பப்படும் மக்களுக்கு பணிபுரிவதற்கு இலங்கை அரசு கட்டுப்பாடுகளும், தடைகளும் விதித்துள்ளதைத் தமிழக அரசும், இந்திய அரசும் வன்மையாகக் கண்டிக்க வேண்டும். அத்துடன் அதனை நீக்க ஆவன செய்வதுடன் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழியாக தமிழக அரசும், இந்திய அரசும் ஈழத் தமிழர்களுக்கு தேவையான அடிப்படைத் தேவைகளான உணவு, மருந்து முதலானவற்றை அனுப்பி உதவ வேண்டும்.

★ இலங்கை அரசுப் படைகளின் மனித உரிமை மீறல்களை இந்தியா கண்டிப்பதுடன் ஈழத் தமிழர் நிலப்பகுதிகளில் உள்ள இலங்கை படைகளைத் தம் நிலைகளில் இருந்து விலக்கித் தமிழர்கள் அவலமின்றி வாழ வழி செய்யுமாறு இலங்கை அரசை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

★ தனுஷ்கோடிக்கும் - கச்சதீவுக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதை கண்டிக்க வேண்டும்.

★ ஈழத்தமிழர் தமிழ்நாட்டுக்கு வருவதைத் தடுக்கக் கூடாது. வந்து சேரும் அகதிகளுக்கு ஏற்ற அனைத்து அடிப்படை வசதிகளைச் செய்து தர வேண்டும்.

## நிவாரணம்

நவாலி, ஜன. 22

மானிப்பாய் ப. நோ. கூ. சங்க கிளைகளில் நிவாரண உணவு முத்திரைக்கு உணவுப் பொருள்களும் பங்கீட்டு அட்டைக்கு 4 லீற்றர் மண்ணெண்ணெயும் வழங்கப்பட்டு வருகின்றன. (இ-100)

# ஹம்பாந்தோட்டையில் வர்த்தகத் துறைமுகம்

கொழும்பு, ஜன. 22

இலங்கையின் இரண்டாவது புதிய வர்த்தகத் துறைமுகம் ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படவிருக்கிறது.

இது தொடர்பான அறிக்கை அடுத்த வாரம் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படும் என்று துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சு கூறுகின்றது.

தற்போது ஹம்பாந்தோட்டையில் உள்ள மீன்பிடித் துறைமுகம் புதிய வர்த்தகத் துறைமுகமாக மாற்றப்படும்.

பல சர்வதேசக் கம்பனிகள் ஏற்கனவே இதற்கான அறிக்கைகளைத் தயாரித்துள்ளன.

இந்தத் துறைமுகத்தை நிறுவுவதன் மூலம் இலங்கை பல நன்மைகளை அடையும் என்று கூறப்படுகிறது. (இ-3)

# நிம்மதி - நிரந்தர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாம் யாழ். மக்களைச் சந்தித்து அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு எம்மால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்யும் நோக்குடன் எம் அலுவலகத்தை ஆரம்பித்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் நாம் சந்தித்து நிற்பது எம் மக்களின் சோகக் குரல்களையே.

யாழ். மக்களை மீட்டு விட்டதாக அரசு உலகெங்கும் பறை சாற்றியது. ஆனால் இங்கு காணாமற் போனவர்களின் அல்லது கைது செய்யப்பட்டவர்களினது உறவினர்களினது கதறல்கள் தான் நாம் காணும் காட்சி.

500க்கு மேற்பட்ட காணாமற் போனவர்களின் அல்லது கைது செய்யப்பட்டவர்களின் விவரங்கள் எம்மிடம் மக்களினால் தரப்பட்டுள்ளன.

இவற்றில் சிலவற்றினை நாம் யாழ். இராணுவ உயர் அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். சிலரை விடுதலையும் செய்துள்ளனர்.

யாழ். நகரை கைப்பற்றும் நோக்குடன் அரசின் படை எடுப்பு ஆரம்பிக்கப்பட்ட போது புலிகளினால் அனைத்து மக்களும் யாழ். நகரை விட்டு விரட்டப்பட்டனர்.

விரட்டப்பட்ட மக்கள் அகதிகளாக ஒவ்வொரு சொப்பிங் பாக்குடன் தமது சொந்தபந்தங்களை இழந்து சொத்துக்களை இழந்துசென்றனர்.

அனைத்து மக்களையும் உடன் திரும்பி வருமாறு சகல தொடர்பு சாதனங்கள் ஊடாகவும் அரசு கேட்டுக் கொண்டது.

புலிகளாக இருந்தாலும் புலிகளின ஆதரவாளர்களாக இருந்தாலும் அப்பாவிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்றும் திரும்பி வந்து குடியேறும் மக்களுக்கு உடனடி நிவாரணம் கொடுக்கப்படும் என்றும் அரசு கூறியது.

மக்கள் அனைவரும் புலிகளின் எதிர்ப்பையும் சமாளித்து தமது இடங்களுக்கு திரும்பினர். திரும்பிய மக்கள் அனைவரையும் புலிகள் தேசத்துரோகிகள் என்றனர். ஆனால் மக்களுக்கு தேவைப்பட்டதோ நிம்மதியான வாழ்க்கை, நிரந்தரமான அமைதி.

ஆனால் அவை அனைத்தும் மக்களுக்கு ஏமாற்றமே. இரு தரப்பினருக்கும் நடக்கும் யுத்தம் காரணமாக கைது செய்யப்பட்டவர்களும் காணாமற் போனவர்களும் தான் அதிகரித்துக் காணப்படும் நிலை.

சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் யுத்தகாரணங்களுக்காக அனைத்துதேவைகளும் இழுத்தடிக்கப்படுகின்றன.

எங்கும் கியூவில் நிற்கும் மக்களின் எண்ணிக்கையே அதிகரிப்பு.

போக்குவரத்து அதாவது கொழும்புப் பயணம் என்பது சாதாரணமக்களுக்கு குதிரைக் கொம்பாக உள்ளது.

அரச நிர்வாகங்களில் நிர்வாகச் சீர்கேடுகளும் அலுவலகங்களில் சில அதிகாரிகளின் துஷ்பிரயோகங்களும் நடைபெறுகின்ற நிலை.

இந்த நிலைமைகள் மாற்றம் அடைய, ஓர் ஒழுங்கான சிவில் நிர்வாக முறை ஏற்பட வேண்டும். அதற்கு அரசியல் தலைமை கொண்ட இடைக்கால நிர்வாக சபை ஒன்று அவசியமான தொன்றாகும். இதைத்தான் நாம் பல தடவை அரசுக்குச் சுட்டிக்காட்டி வருகின்றோம்.

அதே வேளை அரசபடையினர் சில அத்தியாவசிய தேவைகளை மக்களுக்காக செய்து வருகின்றனர். இதை நாம் மறுக்க முடியாது. ஆனால் இந்த அத்தியாவசியத்தேவைகள் எல்லா மக்களையும் சென்றடைவதில்லை.

யாழ். நிலைமைகளை பார்வையிட்டு கொழும்பு திரும்பிய எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, எமது மக்கள் அன்றாட வாழ்க்கையில் எதிர் நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளையும் ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வர உள்ளார்.

குறிப்பாக காணாமற் போனவர்கள் அல்லாது கைது செய்யப்பட்டவர்களின் பிரச்சினைகளை ஜனாதிபதியின் முக்கிய கவனத்தில் கொண்டுவருவதோடு அவர்கள் சம்பந்தமாக வழக்கு ஒன்றையும் தாக்கல் செய்யவுள்ளார்.

இனப்பிரச்சினை விடயத்தில் எமது கட்சி ஏனைய தமிழ்க் கட்சிகளுடன் இணைந்து ஓர் அரசியல் தீர்வை எட்டும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் தென் இலங்கையில் இனவாத சக்திகளின் கூச்சல் குழப்பங்களையும் புலிகளின் நாசகார வேலைகளையும் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்புக்களையும் தாண்டி ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பேன் என்று கங்கணம் கட்டிநிற்கின்றார்.

அதே வேளையில் இராணுவ அழுத்தங்களையும் அவர் கைவிட்டதாக தெரியவில்லை—

இந்த நிலை தொடராது எமது மக்களின் அரசியல் பிரச்சினை தீர்க்கப்பட்டு நிரந்தர சமாதானம் விரைவில் ஏற்பட வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதோடு எமது கட்சியின் பெயரைப் பயன்படுத்தி எவராவது மக்கள் விரோதச் செயல்களில் ஈடுபட்டால் அவற்றை உடன் எமது கவனத்திற்கு கொண்டுவருமாறு மக்களைக்கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் (library stamp, partly legible)

# ஆப்கன் பிரச்சினைக்கு தீர்வு காண ஈரான் முயற்சி

காபூல், ஜன. 22

ஆப்கானிஸ்தானில் உள்நாட்டுச் சண்டைக்கு அரசியல்தீர்வு காண ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த தீவிரவாதக் குழுக்களிடையே அமைதிப்பேச்சு நடத்த ஈரான் முன்வந்துள்ளது.

ஈரானின் இந்த முயற்சிக்கு தலிபான் குழு இணக்கம் தெரிவித்துள்ளது என்றும்—

ஏற்கனவே பாகிஸ்தானில் நடந்த பேச்சுக்கள் அடுத்த மாதம் மீண்டும் தொடரும் என்றும் – தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 லட்சத்து 50 ஆயிரம் ஆப்கன் அகதிகள் ஈரானில் உள்ளதால், ஈரான் இப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## புதுடில்லி நகருக்குள் குரங்குகள் படைஎடுப்பு!

புதுடில்லி, ஜன. 22

புதுடில்லி நகரில் குரங்குகள் படைஎடுத்துள்ளன.

சமீபத்தில் பாதுகாப்பு அமைச்சு, வெளியுறவு அமைச்சு ஆகியவற்றுக்குள் நுழைந்து அங்கிருந்த கோவைகளைச் சேதமாக்கி சிலவற்றை அவை இழுத்தும் சென்றுள்ளன.

குரங்குகள் வீடுகளுக்குள் நுழைந்து அட்டகாசம் செய்வதுடன் சிறுகுழந்தைகள் மீதும்தாக்குதல்நடத்துகின்றன.

குளிர்சாதனப்பெட்டிகளைத் திறந்து உணவுப் பொருள்களைத் திருடவும்குரங்குகள் பழகி விட்டன என்று செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவிக்கிறது. (இ-3)

## பெருவில் 18 பேர் பலி

லீமா, ஜன. 22

பெருநாட்டில் பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் 18 பேர் கொல்லப்பட்டனர்; 28 பேர் காயமடைந்தனர். (இ-3)

## பெரு அதிபர் - போராளிகள் பிடிவாதம் தீரவில்லை

பெருநாட்டுப் பணயக் கைதிகள் விவகாரம் 35 ஆவது நாளாகத் தொடர்கிறது.

அரசும் - துப்பாக்கி ஏந்திய போராளிகளும் தங்களது கடுமையான நிலைப்பாடுகளில் இருந்து இறங்கி வருவதாகத் தெரியவில்லை.

73 கைதிகளும் செஞ்சிலுவைச்சங்கம் ஊடாக தமது குடும்பத்தாருடன் கடிதப் பரிமாற்றம் செய்து கொள்ள போராளிகள் நேற்று முன் தினம் அனுமதித்தனர். (இ-3)

## கிளின்ரன் பதவியேற்பு வைபவத்தில் லெபேட்

### ரஷ்யப் பத்திரிகை கண்டனம்

மாஸ்கோ, ஜன. 22

அமெரிக்க அதிபராக கிளின்ரன் பதவி ஏற்ற வைபவத்தில் ரஷ்யாவின் முன்னாள் பாதுகாப்புச் சபைத் தலைவர் அலெக்சாந்தர் லெபேட் சாதாரண பார்வையாளராகக் கலந்து கொண்டார்.

இதனை மாஸ்கோவிலிருந்து வெளிவரும் கம்யூனிஸ்ட் பத்திரிகை ஒன்று கண்டித்துள்ளது.

அமெரிக்காவின் தயவையும், கவனத்தையும் பெற லெபேட் தமது தரத்தை இப்படி கீழ் இறக்காமல் இருப்பது நல்லது என அப்பத்திரிகை தெரிவித்தது (இ-3)

## உலக அரங்கில்

## அணு ஆயுத தாக்குதலின்போது தப்பக்கூடிய மாற்றுப் பொருள்

### இந்திய ஆய்வாளர் கண்டுபிடிப்பு

அணுக் கதிர் இயக்கத்தின் ஆபத்தான எதிர் விளைவுகளில் இருந்து தற்பாதுகாத்துக் கொள்ளும் எதிர் வினைப்பொருள் ஒன்றை இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் முன்னேற்ற நிலையம் கண்டுபிடித்து வெற்றிகரமாகச் சோதனை செய்துள்ளது.

கடந்த 7 ஆண்டுகளாக நடைபெற்ற ஆய்வு முயற்சிகளின் வெற்றி இது என விஞ்ஞான அதிகாரி ஒருவர் கூறினார்.

யுத்த களத்தில் நிற்கும் தரைப்படையினருக்கு இந்த எதிர் விளைப்பொருள் வழங்கப்படும்.

அதன் மூலம் அவர்கள் அணு ஆயுத தாக்குதலின் போது தாக்குப்பிடிக்க முடியும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார். (இ-3)

## கைதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

வாஷிங்டன், ஜன. 22

கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்க சிறைகளில் அடைக்கப்பட்டிருக்கும் குற்றவாளிகளின் எண்ணிக்கை 2 மடங்காக உயர்ந்துள்ளது என அரசு அறிக்கை கூறுகின்றது.

1985 ஆம் ஆண்டு மொத்த சிறைக் கைதிகளின் எண்ணிக்கை 7 லட்சத்து 44 ஆயிரம் 208 ஆகும்.

1996 ஆம் ஆண்டு 16 லட்சத்து 30 ஆயிரத்து 940 ஆக இது உயர்ந்துள்ளது. (இ-3)

## கௌதமாலாவுக்கு ஐ.நா. பார்வையாளர்

நியூயோர்க். ஜன. 22

மத்திய அமெரிக்க நாடான கௌதமாலாவுக்கு இராணுவப் பார்வையாளர்களை அனுப்பும் திட்டத்தை ஐ.நா. சபை அங்கீகரித்துள்ளது.

அத்திட்டத்தை எதிர்க்கப் போவதில்லை என்று சீனா அறிவித்ததைத் தொடர்ந்து ஐ. நா. சபையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

கௌதமாலாவுக்கு ஐ.நா. இராணுவ பார்வையாளர்களை அனுப்பும் திட்டத்தை சீனா ஏற்கனவே ''வீட்டோ'' செய்திருந்தது.

தாய்வானுடன் கௌதமாலா வைத்துள்ள உறவே இதற்குக் காரணம்.

ஆனால் கௌதமாலா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் இராணுவப் பார்வையாளர்களை அங்கு அனுப்புவதை தடை செய்யப் போவதில்லை என சீனா தெரிவித்தது. (இ-3)

# தமிழ், கத்தோலிக்கம் வளர்வதற்கு உழைத்த சுவாமி ஞானப்பிரகாசர்

### இன்று அவரது ஐம்பதாவது நினைவு தினமாகும்

''திக்கெட்டும் சென்று தேவவார்த்தையைப் பரப்புங்கள்'' என்றார் கிறிஸ்து. அவரது பணியை நிறைவேற்ற, ஆன்மதாகம் கொண்ட ஆத்மிக தொண்டர்கள் பலர் தோன்றியுள்ளனர். அவர்களுள் தனிச் சிறப்பிடம் பெறும் ஒருவரே நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

இவர் மானிப்பாயில் சைவக் குடும்பத்தில் சாமிநாதபிள்ளை – தங்கமுத்து தம்பதிகளின் தவப் புதல்வனாக 30 – 08 - 1875 இல் பிறந்தார். சிறிது காலத்தின் பின் சாமிநாதபிள்ளை இறைவனடி சேர்ந்தார். இளம் விதவை தங்கமுத்து, அச்சு வேலியைச் சேர்ந்தவரும், பத்திரிகையாளரும், அச்சக உரிமையாளருமான தம்பிமுத்துவை மறுமணஞ் செய்து கொண்டார். தாயும் தனயனும் கத்தோலிக்க மறையிற் சேர்ந்தனர். சிறிய தந்தையின் சீரிய வளர்ப்பால் ஞானப்பிரகாசரிடம் அறப்பற்றும் மறைப்பற்றும் மட்டுமல்ல, தமிழறிவும் மொழியாய்வும் பின்னிப் பிணைந்து வளர்ந்தன.

பதினெட்டாம் வயதில் அரச பணியில் சிறப்புடன் பணியாற்றத் தொடங்கிய ஞானப்பிரகாசருக்கு ஆண்டவன் பணியில் ஆர்வம் பிறந்தது. அன்னையின் அரவணைப்பையும், சிறிய தந்தையின் பாசத்தையும், திரண்ட செல்வத்தையும் துறந்து அமலமரித் துறவியானார்.

1901 ஆம் ஆண்டு மார்கழித் திங்கள் முதலாம் நாளில் இறைவனின் குருவாகத் திருநிலைப் படுத்தப்பட்டார். நாற்பத்தாறு ஆண்டுகள் நானிலம் போற்றும் நல்லதொரு துறவியாக திருமறைக்கும் செந்தமிழுக்கும் அரும்பெரும் பணியாற்றிய செம்மல் 'ஞானி', தமது எழுபத்திரண்டாவது அகவையில் (22 - 01 – 1947)இல் இறைவனடி சேர்ந்தார்.

எண்ணத்தாலும் எழுத்தாலும், வாக்காலும் வாழ்வாலும், அறிவாலும் ஆற்றலாலும் கத்தோலிக்கமும் தமிழ் மொழியும் வளர்ச்சியுற உழைத்தவர் இவர்.

சிறுவயது முதல் இயல்பாகவே, ஒடுக்கப்பட்டவர் மேல் இரக்கங் கொண்ட 'ஞானி' குருவானதும், வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்கட்கும், வாழ வசதியின்றித் தவித்தவர்கட்கும் கை கொடுத்து உதவுவதே தமது தலையாய பணியெனக் கொண்டார். அடிகளாரின் அறிவாற்றலையும் ஆய்வுத் திறனையும் அறிந்து பல வெளிநாட்டு மன்றங்கள் அவரை அழைத்த போதும், ஏழை மக்கள் பணியே மகேசன் பணியெனக்கூறி, யாழ். குடாநாட்டில் பரந்து பரவிக் கிடந்த நல்லூர் மீசாமின் குடிசைகளிலேயே பணிசெய்தார். ஒடுக்கப்பட்டோர் மத்தியில் ஓலைக் குடிசைகளிலே வாழ்ந்து கால் நடையாகவும் கரத்தை வண்டியிலும் பயணம் செய்து மறைப் பணி செய்தார். மழைத் தூறலிலிருந்து தன்னைக் காக்க ஒழுகும் ஓலைக் குடிசைக்குள் ஒரு கையில் குடையும் மறுகையில் பேனாவும் பிடித்து எழுத்துப் பணியின் எல்லை வரை சென்றார்.

**சாதிக் கொடுமையை சாடியவர்**

யாழ்ப்பாணத்தில் சாதிக் கொடுமை என்ற இரும்புச் சில்லுக்குள் சிக்கித் தவித்த தாழ்த்தப்பட்டோரின் அவல நிலை கண்டு மனம் நொந்தார். அக்கொடுமை கிறிஸ்தவர்களையும் கிறிஸ்தவர் அல்லாதாரையும் ஆட்டிப் படைப்பதை ஆய்ந்தறிந்து, ''இருபத்தைந்து வருட கத்தோலிக்க வளர்ச்சி'' என்ற தமது சமயநூலில், எவ்வாறு சாதி உணர்வு தமிழனின் இரத்தத்தில் ஊறிப்படர்ந்துள்ளது என்பதை எடுத்துக் காட்டியுள்ளார். சாதிப்பாகுபாட்டை திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் ஒழிக்க அரும்பாடுபட்டார்.

அடிகளாரின் வியத்தகு பணியை நன்றியுடன் நினைவு படுத்துகிறார் எழுத்தாளர் அமரர் கே. டானியல் அவர்கள். அவரது ''கானல்'' என்ற மறுமலர்ச்சி நாவலினூடாக அடிகளாரின் விடுதலைப்பணியையும், அதை இறைவலுவோடு அவர் மேற்கொண்ட முறைகளையும் விளக்குகிறார். தாம் அடிகளுடன் நெருங்கிப் பழகியிருப்பதாகவும் சமூக மறுமலர்ச்சிப் பணியில் அவரது பங்களிப்பு அந்தக் காலகட்டத்தோடு ஒப்பிடும்போது, முதன்மைப் படுத்தப்பட [illegible] தொன்று என்றும் அமரர் டானியல் குறிப்பிடுகிறார்.

திருமறையைப் பரப்புவதில் புனித சின்னப்பரைப் போல, புனித சவேரியாரைப் போல துன்புற்றார். இத்துன்பத்தை தாம் வெளியிட்ட ''அமலோற்பவ இராக்கினித் தூதன்'' என்ற சஞ்சிகையில் —

''சித்திர வேதனைப்பட்டுச்
சிந்தியே உதிர வெள்ளம்
சத்திய மறைக்காய் உயிர்
தந்த
வேதசாட்சிகள் போல்
நித்தியம் நான் உம்முடைய
நேசத்துக்காய் மகிழ்ந்து
எத்துணைத்துன்பத்தையும்
ஏற்க வரம் அருளீரோ''

என்று பாடி இருப்பது சிந்திக்கத்தக்கது.

அடிகளார் தாம்பெற்ற நிறைவான தமிழ் அறிவை, திருமறையை வளர்க்கவும் பரப்பவும் நன்கு பயன்படுத்தி உள்ளார். துண்டுப்பிரசுரங்கள் தொடக்கம் கிறிஸ்து நாதர் சரித்திர ஆராய்ச்சி வரை, செபச்செண்டு முதல் மோட்சபாதை வரை ஆயிரக்கணக்கான நூல்களை எழுதிக்குவித்துள்ளார். அமலோற்பவ இராக்கினித் தூதன், குடும்ப வாசிகசாலை, சத்திய சலாநிதி திங்கள் இதழ்களை வெளியிட்டதுடன் Catholic Guardian, சத்திய வேத பாதுகாவலன் என்ற வார இதழ்களின் ஆசிரியராகவும் பணிபுரிந்துள்ளார்.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக, காலத்துக்குக்காலம் பல்வேறு தமிழறிஞர்கள் தோன்றி வியத்தகு பணியாற்றி வருகின்றனர். ஈழத்து மண்ணிலேயும் அவ்வித பணியாளர்கள் பலர் உண்டு. தமிழகத்துக்கு வழிகாட்டிகளாக அவ்விதம் விளங்கியோரில் சுவாமி ஞானப்பிரகாசரும் ஒருவர். அவரது மேதா விலாசத்தை மெச்சி, அவர் வாழும் போதே தபால் தலையில் அவரதுகம்பீரத்தோற்றத்தை பொறித்துக் கௌரவித்தது ஜேர்மனிய அரசு. அதற்குப் பல ஆண்டுகளின் பின்னர் எமது நாடும் தபால் தலை வெளியிட்டு (1981 இல்) கௌரவித்துள்ளது.

எழுபதுக்கு மேற்பட்ட மொழிகளின் வேர் அறிந்து சொல் அறிந்து, பொருள் அறிந்து, சொல்லும் வகையறிந்து, உரையாடி அறிந்து அதன் பின்பு உறுதியாக அவர் வெளியிட்ட முடிவுகளே அவரது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி. அடிகளாரின் தமிழ்ப்பணிக்கும் நூல் வெளியீட்டுக்கும் மகுடமாய் அமைந்து விட்டது ஒப்பியல் அகராதி.

ஒரே தருணத்தில் ஏழெட்டு துறைகளில் கவனம் செலுத்தக்கூடிய அற்புத சக்தி (அட்டாவதானம்) அவரிடமிருந்ததை அவருடன் நெருங்கிப்பழகிய பல பெரியார்கள் அவதானித்துள்ளார்கள்.

''திறமான புலமையெனில் வெளிநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும்'' என்றான் புரட்சிக் கவி பாரதி பல்கலைக்கழகம் காணாத இப்பண்டிதனுக்கு, பல நாடும் சுற்றித்திரியாத இப்பன்மொழிப் புலவனுக்கு வெளிநாட்டார் புகழாரம் செலுத்திக் கௌரவித்தனர். ஆய்ன் அவர் பிறந்த மண் அவரைக் கௌரவித்ததா? அவரது இலட்சியங்கள் பேணப்படுகின்றனவா?

– 'சாந்தி'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு:இல.15,மெமோரியல் வீதி, மானிப்பாய். (மெமோரியல் ஆங்கிலப்பாடசாலை முன்பாக) (44734)

### சோதிடம்

குறிப்புகள எழுத, குறிப்புப் பலன்,திருமணப் பொருத்தங்கள் பார்க்க ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், கோயில் வீதி, முடமாவடி, நல்லூர், யாழ்ப்பாணம். (44776)

### நாடகம் எழுதுவது?

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதிய இந்த நூல் இலக்கியம், நாடகம் பற்றிய பல விடயங்களை விளக்கிக் கூறுகின்றது. ஒரு நாடகமும், 22 கட்டுரைகளும். ரூபா 50. பூபாலசிங்கம் புத்தகசாலை. (44774)

### தவறிவிட்டது

பிறவுண்நிற கவருடன் சில்வர் பிறேம் கண்ணாடி, கொடிகாமம் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செல்லையா பத்மநாதன் [நாதன்], எரிபொருள் நிரப்பு நிலையம், கொடிகாமம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (44799)

### ஓர்கன் வகுப்பு

ஓர்கன், புல்லாங்குழல், கிற்றார் ஆகிய வகுப்புகளின் புதிய பிரிவுகள் நாளை 23 - 01 - 97 காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. வார நாள்களில் மாலை 2.00 மணியிலிருந்து வகுப்புகள் நடைபெறும். முகவரி:- 238, கோயில் வீதி, நல்லூர் (ஆலயத்திற்கு தெற்கே). (44731)

## மருந்து வகைகள்

நவாலி, ஜன. 22

கைதடி சித்த ஆயுர் வேத போதனா வைத்திய சாலைக்கு கொழும்பிலிருந்து ஒரு தொகுதி மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன. (இ-100)

## வன்னியில் மருந்து தட்டுப்பாடு

வன்னிப் பகுதியில் மருந்துத் தட்டுப்பாடு உச்ச நிலையை அடைந்திருப்பதாகச் சொல்லப் படுகிறது.

போதிய மருத்துவ சிகிச்சையின்றி மரணமாகும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இந்த அவல நிலை குறித்து மருத்துவ அதிகாரிகளும், தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும் ஜனாதிபதிக்கு பலமுறை கடிதம் எழுதியும் எந்தவித பலனும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பல்கலைக்கழக மாணவர் அ. அட்டை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விசேட அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த ஒரு தொகுதி மாணவர்களுக்கான விசேட அடையாள அட்டைகள் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல் பல்கலைக்கழகத்தில் வழங்கப்படவுள்ளன.

அடையாள அட்டை வழங்கப்படவுள்ளோரின் பெயர்ப் பட்டியலைப் பல்கலைக்கழக —விளம்பரப் பலகைகளில் பார்வையிடலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ஆசிரிய பதவி வெற்றிடம்

மேற்படி விடயம் தொடர்பாக விண்ணப்பித்தவர்கள் அனைவரும் பின்வரும் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

1) விண்ணப்பத்தின் பிரதி ஒன்று.
2) கல்வித்தகைமைகள்/ அனுபவங்களை நிரூபிக்கும் சான்றிதழ்கள்.

**காலம்: 24 - 01 - 97** காலை 8. 30/ பி.ப 4.00 மணி.
(தனித்தனி அறிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

**- அதிபர்**

ESTD:-1973 REGD:- № J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

(44804)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



மண்ணின் முத்தாக: 1981 — 12 — 30

விண்ணின் சொத்தாக: 1993 — 01 — 22

### செல்வி கார்த்திகா பத்மநாதன்

(யா/இடைக்காடு மகா வித்தியாலய மாணவி)

அன்பின் உருவாய் பண்பின் உறைவிடமாய்
பாசமுள்ள மகளாய் - தங்கையாய் எம்முடன்
வாழ்ந்த அன்புத் தெய்வமே!
துள்ளித்திரிந்து பள்ளிசென்றும் குறும்புகள் பல
செய்தும்
எம்மை என்றும் மகிழ்விக்கும் அன்புச் செல்வமகளே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட அன்புத் தங்கையே!
உனது பொன்னானமேனி பாழும் லொறி
மோதி மண்ணோடு மறைந்து நான்காண்டு
விரைந்து சென்றதேனோ?
எம் உயிர்ச் சகோதரியே!
எமது கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

அழியா நினைவுகளுடன் ஆறாத்துயர்கொண்ட:

**அன்பு அப்பா, அம்மா, அக்காமார், உறவினர்கள்.**

'ரங்கூன் இல்லம்'.
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(44782)

## கண்ணீர் அஞ்சலி

எமது ஆசிரியை

**செல்வி மரியடொறிஸ் செல்வராஜி செபஸ்தியாம்பிள்ளை**

அவர்களின் அருமைத் தந்தையார்

### அமரர் செபஸ்தியாம்பிள்ளை

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**A/L 97, 98, 99 கணிதப்பிரிவு மாணவிகள்.**

**யா/ வேம்படி மகளிர் கல்லூரி.** (44810)

## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் ஏரம்பு சோதிலிங்கம்

(மண்டை தீவு)

மண்ணுலகில்; **05 - 04 - 1926**

விண்ணுலகில்: **15 - 01 - 1995**

**திதி: 22 - 01 - 1997**

எங்கள் குடும்ப ஒளித்தீபமே!
குலம் சிறக்கவைத்த உத்தமனே!
வீரத்தின் உறைவிடமே!
ஞாலத்தில் புகழ் பூத்தவனே!
அழகுக்கோர் மன்மதனே!
அன்பின் உறைவிடமே!
எங்கள் நல்லாசானே!
சிறந்த வழிகாட்டியே!
தரணியில் நாம் தலை நிமிர்ந்து
வாழ வைத்த உத்தமரே!
எம்மை விட்டுச்சென்று
ஈராண்டல்ல ஈரேழு யுகமானாலும்
என்றுமே உங்கள் நினைவு
எம்மை விட்டு நீங்கா.
எங்கள் இதயத்தில் இறையாகிவிட்ட
உங்களை என்றுமே துதிக்கிறோம்.
போற்றி வாழ்த்துகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்,மைத்துனர்.**

பிரம்படி,
கொக்குவில்.

(9189)

உ

## பூப்புனித நீராட்டு விழா அழைப்பு





அன்புடையீர்!

**நிகழும் மங்களகரமான தாது வருடம் தைத் திங்கள் 10 ஆம் நாள் (23-01-1997) வியாழக்கிழமை பூச நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை 8. 00 மணி தொடக்கம் 12. 30 மணி வரையுள்ள சுப வேளையில்**

**எமது சிரேஷ்ட புதல்வி**

### செல்வி கவிதா

அவர்களுக்கு

**பூப்புனித நீராட்டு விழா நடத்த இறையருள் கூடியமையால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகைதந்து செல்வியை ஆசீர்வதித்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

உங்கள் நல்வரவை நாடும்:

**திரு. திருமதி தியாகராசா**

(கிராமசேவை உத்தியோகத்தர்)

'ரங்கூன் இல்லம்'
ஆத்தியடி,
பருத்தித்துறை.

(44792)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

உதயன்

# சட்டியும் பானையும்

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா போரைப் பற்றியும், அரசியல் தீர்வு குறித்தும் இளைஞர் மாநாடு ஒன்றில் கருத்து வெளியிட்டிருக்கின்றார்.

இரண்டு விடயங்களிலும் அரசாங்கத்தை விமர்சிக்கும் பாணியில் — அனேகமாகச் சாடும் விதத்தில் — அவரது கருத்துக்கள் அமைந்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் என்பதால் அரசாங்கத்தின் குறை குற்றங்களை எடுத்துச் சொல்வதன் மூலமே அவர் தமது கட்சிக்கு மக்களின் ஆதரவைத் தேடலாம்.

ஆனால் எதிர்க் கட்சித் தலைவர் கருத்து வெளியிட்டிருக்கும் இரண்டு விடயங்களும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த, நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள் இட்டு வைத்திருக்கும் பெரும் விவகாரங்கள். அவை இரண்டும் ஒன்றோடு மற்றையது பிணைந்தது. அவை முடிவுக்குவருவதில் தான் நாட்டின் எதிர்காலமே தங்கியுள்ளது.

இதனை மறந்த நிலையிலேயே, சாதாரண அரசியல் கருத்துக் களம் ஆடியிருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்.

இராணுவத் தந்திரோபாயத்தில் அரசு தோல்வி கண்டு விட்டது. போர் அரசியல் நோக்கங்களுக்காகவே நடத்தப்படுகின்றது; இராணுவ நோக்கங்களுக்காக நடத்தப்படவில்லை.— மக்களைத் திசை திருப்பவே போரைத் தீவிரப் படுத்தி இன்னொரு முறை மக்களை ஏமாற்றி உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறுவதே அரசின் திட்டம்.

எதிர்க் கட்சித் தலைவரின் மேற்படி கருத்துக்கள் சரியானவையாகக் கூட இருக்கலாம். ஆனால் அவற்றை வெளியிட்டு தமது கட்சிக்கு அரசியல் ஆதரவு பெற ரணில் முயல்வது தான் வெறுக்கத் தக்கது.

அவர் இந்தக் கருத்துக்களை பெரிது படுத்த முயல்வது பொருத்தமல்ல. இதே நிலையே, இதே போக்கே அவர் பிரதமராக, அமைச்சராக இருந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் கைக்கொள்ளப்பட்டது.

வடக்கு — கிழக்கில் போர் நடந்து கொண்டிருந்த போதே ஐக்கிய தேசியக் கட்சி அரசு கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தியது. 1994 பொதுத் தேர்தலை நடத்துவதற்காக போரைத் தீவிரப்படுத்தியது. அரசியல் ஆதாயத்துக்காக, நன்மைக்காக இராணுவ நோக்கங்களை, இலக்குகளை வகுத்துக் கொண்டது.

அவற்றையே இப்போதைய அரசும் செய்கிறது என்று ரணில் குற்றஞ் சாட்டுவது சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்று கேலி செய்வது போன்றதாகும்.

தாம் கடைப்பிடித்த பழைய அணுகுமுறைகளைத் தவிர்த்து நாட்டின் முதன்மையான பிரதானமான பிரச்சினையை தீர்க்க அரசு முயலவேண்டும் என்று ரணில் கூறியிருந்தால்; அது வரவேற்கப்பட வேண்டியதே. ஸ்ரீ. ல.சு. கட்சி எதிர்த் தரப்பில் இருந்தபோது கூறியதையே இப்போது ரணில் திரும்பச் சொல்வதால் ஆக்கபூர்வமாக ஆகப்போவது எதுவுமில்லை.

# கெப்பிற்றிக்கொலாவ பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோர் திரும்பத் தயக்கம்

## பாதுகாப்பு வேலி அமைக்குமாறு கோருகின்றனர்

கொழும்பு, ஜன. 22

கெப்பிற்றிக் கொலாவ பிரதேசத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பலப்படுத்துமாறு பிரதேசவாசிகள் அரசாங்கத்தைக் கேட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மகாகச்சிக் கொடியவவிலிருந்து பதவியா வரைக்கும் பாதுகாப்பு வேலியையும், காவலரண்களையும் அமைக்குமாறு அவர்கள் அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளனர்.

இவ்வாறு வேலிகளும், காப்பரண்களும் அமைக்கப்பட்டால் தாம் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லத் தயாராக இருப்பதாக இப் பகுதியில் இருந்து வெளியேறியவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே 5 மைல் நீளத்துக்குப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது என்றும் —

தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டால் எஞ்சிய 10 மைல் தூரத்துக்கும் வேலிகளை அமைக்க முடியும் என்றும் —

இதன் மூலம் பதவியாவில் உள்ள 15 கிராமங்களை தாக்குதலில் இருந்து காப்பாற்றலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாகச்சிக் கொடியவ விலிருந்து பதவியா வரைக்கும் பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் பணியை காலஞ்சென்ற டென்ஸில் கொபேக்கடுவ ஆரம்பித்தார்.

அவரது மரணத்தின் பின்னர் இது தடைப்பட்டது. இந்த வேலி முழுமையாக அமைக்கப்பட்டிருந்தால் பதவியா பகுதி மக்கள் எவ்வித அச்சமும், தொல்லையும் இன்றி வாழ்ந்திருக்கலாம் என்று நாடாளுமன்ற உறுப்பினரான திஸ்ஸ கரலியட்ட தெரிவித்துள்ளார். (இ-3)

# கெப்பிற்றிக்கொலாவ தாக்குதலில் புலிகள் தரப்பில் ஆறுபேர் சாவு!

## ஆயுதங்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டன

கெப்பிற்றிக்கொலாவ கலுகங்வக முகாம் மீது கடந்த சனிக்கிழமை அதிகாலை 2-45 மணியளவில் தாம் நடத்திய தாக்குதலின்போது தமது தரப்பில் ஆறு வேங்கைகள் வீரச்சாவடைந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு ஓகஸ்ட் 19 ஆம் திகதி இதே முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த இரண்டாம் லெப்டினன்ட் தமிழ்ரூபன், வீரவேங்கை சிவகீர்த்தி ஆகியோரின் நினைவாகப் பொலீஸாரும், இராணுவத்தினரும் இருந்த அதே முகாம் மீது கடந்த 18 ஆம் திகதி இத்தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் தெரிவித்தனர். புலிகள் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

அதிகாலை 2-45 மணியளவில் ஆரம்பமான தாக்குதல் 30 நிமிட நேரம் நீடித்தது. அதற்குள் முகாமைக் கைப்பற்றிய புலிகள் சுமார் ஒன்றரை மணி நேரம் அதனைத் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பின்னர் அதனை அழித்தனர்.

அங்கிருந்த டிராக்டர், பாரிய ஜெனரேட்டர், தண்ணீர் பவுஸர் ஆகியனவும் முற்றாக அழிக்கப்பட்டன.

23 இற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டனர்; இருபதுக்கும் மேற்பட்ட படையினர் காயமடைந்தனர். எமது தரப்பில் வீரச்சாவடைந்த போராளிகள் அறுவரின் விபரம் வருமாறு:-

★ மேஜர் அருண்மொழி அல்லது பீற்றர் (இராசநாயகம் — பரமநாதன்)

★ கப்டன் கலிங்கன் (நடராசா சின்னராசா)

★ கப்டன் ராஜ்மோகன் நாயகன் (புஷ்பானந்தராசா புஷ்பஜெகன்)

★ லெப்டினன்ட் இளம்பிறை வாணன் (மகாலிங்கம் கனகராசா)

★ லெப்டினன்ட் சிலம்பரசன் (வாரிமுருகேசு சுதாகர்)

★ 2 ஆம் லெப்டினன்ட் அன்பழகன் (சேது நிமலன்)

இத்தாக்குதலின் போது எம்மால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு:-

60 எம். எம். மோட்டார் (லோங் பரல்) — 01, ரி- 81 எல். எம். ஜி — 05, ஆர். பி. ஜி எல். எம்.ஜி-1, 40 எம். எம். சிங்கப்பூர் பிஸ்டல் — 02, ரி- 56 2 ரக இயந்திரத் துப்பாக்கி — 11, ரி 56- 2 ரக துப்பாக்கி — 08, எஸ். 84 — 01, 60 எம். எம். மோட்டார் ஷெல் — 92, 60 எம். எம். மோட்டார் பூஸ்ரர் -- 225, 60. எம். மோட்டார் ரம் போஸ்ட் — 1 60. எம். எம். மோட்டார் ஸ்கோப் — 01, 40 எம்.எம். ஷெல் — 24, ஐ. எம். ரவைகள் — 27 ஆயிரத்து 800, ஐ எம். ரவை லிங்குடன் — 337, 5. 56 ரவை — 68, குண்டு — 1, தொலைத் தொடர்பு சாதன செட் — 01, அதற்குரிய குறோஸ் — 01, வோக்கி — 01, ரி 81 ரம்மகஸின் — 44, ஆர். பி. ஜி. ரம் மகஸின் 03, ஏ. கே. மகஸின் — 44, எஸ் 84 மகஸின் — 03, ஏ. கே. ஹோல்ஸர் — 05, கான் பரா லைட் — 04, ரெயிங்கோர்ட் — 03, சுமரா — 01

- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# வீதியில் கிடந்த பொருளை எடுத்து எறிய அது வெடித்தது

## அச்செழுப் பகுதியில் மூவர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 22

வீதியில் கிடந்த இனந் தெரியாத ஒரு பொருளை எடுத்து எறிந்த போது அது வெடித்ததில் மூவர் காயமடைந்தனர்.

நீர்வேலி அச்செழுப் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தில் அச்செழுவைச் சேர்ந்தவர்களான மயில்வாகனம் நவநீதன் (வயது 25) மகாலிங்கம் பிரபாகரன் (வயது 23) செல்வரத்தினம் மோகனராஜ் (வயது 16) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-15)

# வாகனங்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜன. 22

யாழ்ப்பாணம் பிரதேச செயலாளரினால் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட 1996 டிசம்பர் மாதப் பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தங்கள் பட்டியலில் குறிப்பிடப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஜனவரி மாதத்துக்கான முதலாவது சுற்று மண்ணெண்ணெயைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## நாளை

**தை 10**

**வியாழக்கிழமை**

திதி: பூரணை முன்இரவு 9.20 வரை.

நட்சத்திரம்: பூசம் காலை 8-27 முதல் வெள்ளி முற்பகல் 10-51 வரை.

தைப்பூசம்

ராகுகாலம்: 2.06-3.36

[illegible]

[illegible] பழைய நேரப்படி)

# அரிச்சுவடி ஏடு

யாழ்ப்பாணம், ஜன. 22

தைப்பூச தினமான நாளை ஏடு தொடக்க இருக்கும் சனசமூக நிலையங்கள், இந்து மன்றங்கள், பாடசாலைகள், தேவஸ்தானங்கள் தங்கள் தேவைக்குரிய அரிச்சுவடிய ஏடுகளை ''மில்க்வைற்'' ஸ்தாபனத்தில் விண்ணப்பித்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## ஐந்து தமிழ்க்கட்சி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கே இந்தியா உதவும் என்றும் —

இந்தியாவில் தங்கியுள்ள அகதிகளுக்கும் உதவுவோம் என்றும் — அவர் கூறினார்.

ஈ. பி. டி. பி, புளொட், ரெலோ, ஈரோஸ், ஈ. பி. ஆர். எல். எவ். ஆகிய கட்சிகளே இந்த சந்திப்பில் கலந்துகொண்டன.

## வை - 12

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள், பிரிட்டிஷ் தயாரிப்பு அவ்ரோ விமானம், ஆர்ஜென்ரீனா தயாரிப்பு புக்காரா விமானம், சீனத் தயாரிப்பு வை - 8 ரக விமானம், அமெரிக்க பெல் ஹெலிகள் இழக்கப்பட்டுள்ளன. சில வானூர்திகள் சுட்டும் வீழ்த்தப்பட்டுள்ளன. சில இயந்திரக் கோளாறு காரணமாகவும் வீழ்ந்துள்ளன.

அதிகாரிகள் உட்பட 300 படையினர் இச்சம்பவங்களில் இறந்துள்ளனர்.

பூநகரியில் இஸ்ரேல் தயாரிப்பு தன்னியக்க விமானம் காணாமற்போய் 6 நாள்களில் சீனதயாரிப்பு வை- 12 விமானம் காணாமற்போயுள்ளது.

14 பேர் பயணம் செய்ய வசதி கொண்ட இந்த விமானத்தை கண்டுபிடிக்க விமானக் கடற்படையினர் தேடுதலை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விமானத்தை ஓட்டிச் சென்ற வெத்தசிங்க நாணயக்கார, கடற்படையைச் சார்ந்த அதிகாரியான ரணசிங்க ஆகியோருடன் மற்றுமொருவர் இந்த விமானத்தில் இருந்தார்.

(இ- 3- 150)

## இலங்கை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரிகையாளர் மேர்வின் டி சில்வா தலைமை வகித்தார்.

இந்திய அமைச்சர் தமது உரையில் தெரிவித்ததாவது:-

இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் இந்தியா தலையிடமாட்டாது. அல்லது இந்த நாட்டின் இறைமைக்கு பாதிப்பு ஏற்படுத்துகின்ற எந்த நடவடிக்கையையும் அது மேற்கொள்ளாது.

சகோதரத்துவ அடிப்படையில் பரஸ்பர புரிந்துணர்வு வளர்க்கப்பட வேண்டும். இலங்கையின் இனப்பிரச்சினை மூலம் இருநாடுகளும் கற்றுக் கொண்டுள்ள முக்கியமான பாடம் இதுதான்.

**இந்தியாவின் நம்பிக்கை**

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண்பதில் இலங்கைக்குள்ள உறுதிப்பாட்டைக் கருத்தில் கொள்ளும் போது, இந்த முயற்சியில் பின்னடைவு ஏற்பட்டாலும், சமாதானம் நிலைநாட்டப்படும் என்பதில் இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளது.

**தாக்கம் உணரப்படுகிறது**

ஒரு நெருங்கிய அயல் நாடு என்ற வகையில், இலங்கையில் ஏற்பட்டுள்ள பிணக்கின் தாக்கம் இந்தியாவில் உணரப்படுகின்றது.

இலங்கையின் பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவது, இந்தியாவுக்கும் முழுப்பிராந்தியத்துக்கும் நன்மை பயக்கும் என்ற எமது மதிப்பீட்டின் அடிப்படையில் தலையீடு செய்யாமல் உதவுவதே எமது நோக்கமாகும்.

**நியாயமான அடிப்படை**

இலங்கை அரசாங்கம் முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நியாயமான அடிப்படையாகவே இந்தியா கருதுகின்றது.

இந்தியா அதன் எல்லைப்புற அயல் நாட்டுக் கொள்கைக்கு அமைய மிகச் சிறந்த நண்பன் என்ற முறையிலும் அயல் நாடு என்ற முறையிலும் இலங்கைக்கு இயன்றளவு கூடுதல் ஒத்துழைப்பை வழங்க முன்வரும்.

பயங்கரவாதம் மூலமாகவும் ஆயுதம் மூலமாகவும் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியாது. கலந்துரையாடலும், சமாதான வழிமுறைகளுமே பிரச்சினைகளைத் தீர்க்கும் மார்க்கங்களாகும்.

இப்படி அவர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் ராஜதந்திரிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

### அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கு பாராட்டும் வாழ்த்துகளும்!

இடம்பெயர்வு மற்றும் போர் நலிவுகளுக்கு மத்தியிலும் இம்முறையும் வழமைபோல் ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 40 வீதத்துக்கு மேற்பட்ட (இம்முறை 43வீதம்) மாணவர்களைச் சித்திபெற வைத்த

எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும் மற்றும் சித்தியடைந்த மாணவர்களுக்கும் எமது பாராட்டுகளும் வாழ்த்துகளும் நன்றிகளும் உரியனவாகுக!

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**பழைய மாணவர் சங்கம்,**
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

(சி/3968)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



### வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன்

(உரிமையாளர், மொடேண் ரேட்ஸ்)

மலர்வு: **22—03—1943** உதிர்வு: **23—12—1996**

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் திருவுருவாய்
அன்பின் சிகரமாய் அவனியில் உலா வந்தீரே!
நண்பின் இலக்கணமாய்த் திகழ்ந்து நானிலத்தில்
நல்லவர் உள்ளமதில் நற்றாமரையாய் மலர்ந்தீர்!

இன்று (22-1-97) புதன்கிழமை காலை 10 மணிக்கு எமது அராலி இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகள்.

**மனைவி, சகோதரர்கள், மைத்துனர்கள்.**

அராலி தெற்கு, வட்டுக்கோட்டை. (44818)

## தீப் பிடித்தது

புதுடில்லி, ஜன. 22

இந்திய விமானப்படைக்குச் சொந்தமான மிக் - 29 ரக விமானம் ஒன்று நேற்று பூனா பகுதியில் நடுவானில் தீப்பிடித்து விழுந்து வெடித்தது. விமான ஓட்டி கொல்லப்பட்டார். (இ-10)

## 5 ஆம் ஆண்டு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பொஸ்கோ பாடசாலை — 88 பேர் (110 பேர் தோற்றினர்.)

★ யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை — 56 பேர் (130 பேர் தோற்றினர்.)

★ யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை — 36 பேர் (83 பேர் தோற்றினர்.)

★ சென். ஜோன்ஸ் கல்லூரி — 24 பேர் (47 பேர் தோற்றினர்.)

★ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி — 21 பேர் (49 பேர் தோற்றினர்.)

★ யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி —16 பேர் (57பேர் தோற்றினர்,)

★ யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் — 7 பேர்.

★ ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் பாடசாலை — 6 பேர் (36 பேர் தோற்றினர்)

★ திருநெல்வேலி றோ.க. த.க. பாடசாலை — 6 பேர்

★ யாழ். மத்திய கல்லூரி — 5 பேர்

★ திருநெல்வேலி இந்து — 5 பேர்

★ கல்வியன்காடு ம.வி — 3 பேர்

★ நல்லூர் காசிப்பிள்ளை — 3 பேர்

★ யாழ்ரன் கல்லூரி — 3 பேர்

★ பெரியபுலம் பாடசாலை — 2 பேர்

அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், வேலணை சைவப்பிரகாசா, மண்டைதீவு ம.வி ஆகியவற்றில் தலா ஒவ்வொரு மாணவர் சித்தி பெற்றனர்.

**கூடுதல் புள்ளி பெற்றோர்**

மாவட்டத்தில் கூடுதல் புள்ளிபெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

★ அன்றூ — 171 புள்ளிகள் (தும்பளை சைவப்பிரகாசா வித்.)

★ மயூரதி — 168 புள்ளிகள் (யாழ். இந்து ஆரம்ப பாடசாலை)

★ ஏ. ரகுராஜ் — 167 புள்ளிகள் (சுன்னாகம் நாகேஸ்வரி வித்.)

★ சதாசிவஐயர் நடராஜ சர்மா — 166 புள்ளிகள (சென். ஜோண் பொஸ்கோ)

★ கே. பிரகாஷ் — 161 புள்ளிகள் (சாவகச்சேரி இந்து.)

★ பி. பிரணவன் — 161 புள்ளிகள் (சென். ஜோன்ஸ் கல்லூரி) (அ-3-5-51)

## கப்பல் பயணிகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

199, 200, 263, 264, 415, 416, 417, 421, 422, 423, 425, 426, 427, 430, 435, 437, 438, 439, 440, 442, 443, 444, 450, 451, 452, 453, 454, 455, 456, 457, 458 ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் இக் கப்பலில் செல்ல இன்று முதல் பெயர்களைப் பதிவு செய்யலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்யவிருக்கும் பயணிகள் நாளை காலை 7 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை - பட்டியல் இலக்கம், 459, 460, 461, 492, 493, 494, 495, 496, 500, 501, 502, 503, 504, 505 ஆகியவற்றைச் சேர்ந்தவர்களுக்கு பயணம் செய்ய அனுமதி கிடைத்துள்ளதாகவும் —

இப்பட்டியலில் உள்ளவர்கள் அடுத்த கப்பல்களில் செல்ல பெயர்களைப் பதியலாம் என்றும் - சிவில் அலுவலகம் அறிவித்துள்ளது. (இ-3-4)


## யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### தூய, பிரயோக கணிதம்

**திரு. கருணா**

ஆரம்பம்: 23-01-1997 வியாழன்

**97 A/L** காலை 6-30 - 8-30
தொகையிடு வட்ட இயக்கம்

**96 A/L** காலை 8-30 - 10-30
துரித மீட்டல் வினா விடை

**98 A/L** காலை 10-30 - 12-30
வகையிடு - எறியம்

**99 A/L** காலை 12-30 - 2-30
திரிகோணகணிதம்
சமனிலை

(44820)


## மரண அறிவித்தல்

### கந்தர் செல்லையா

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் செல்லையா 21-1-97 இல் காலமானார்.

இவர் கதிராசிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தர்மலிங்கம் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்), பொன்னம்மா (பிரான்ஸ்), கந்தையா (ஜேர்மனி), மகேஸ்வரி (ஜேர்மனி), நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (22-1-97) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மாசுவன் மயானத்தில் தகனஞ் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
**செ. தர்மலிங்கம்**
(மகன்)

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(44812)


காந்தமென அலங்காரம் கவர்ந்திழுக்க புன்னகை அரசிகள் பொன்னகை பெற்று மின்னிட
நாளை உதயமாகின்றான்!

## சாரங்கா நகை மாடம்

177/4 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

**நவநாகரிக மங்கையர் விரும்பும் சிறந்த நகைகளை புத்தம் புதிய டிசைன்களில் காலத்திற்கும் தரத்திற்கும் உகந்தவாறு சிறந்த வேலைப்பாட்டுடன் தயார் செய்ய சிறந்த ஸ்தாபனம்!**

இவன் பல்லாண்டுகளாக மக்கள் மனம் கவர்ந்து வரும் யாழ்ப்பாணம் **அருள் முருகன்** நகையகத்தின் கிளை ஸ்தாபனமாக உதயமாகின்றான்.

மேலும் உங்கள் ஆபரணத் தேவைகளுக்கு அருள் முருகன் நகையகம், சிவா நகை மாடம், யாழ். வீதி, சாவகச்சேரி என்ற முகவரியிலும் இணை ஸ்தாபனமாக உள்ளதென்பதையும் மிகவும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். (44817)



EXHIBITION EXHIBITION

## திருமறைக் கலாமன்றம்

நடத்தும்

A.V. ஆனந்தனின்

## சிற்பக் கண்காட்சி

4 நாள்கள்

காலை 10-00 மணி முதல்
மாலை 05-00 மணி வரை

25-01-1997 ○ கருத்தரங்கு
26-01-1997 ○ கலைநிகழ்வு
27-01-1997 ○ சொற்பொழிவு
28-01-1997 ○ விளக்கவுரை

★ இறையியல் தொட்டு உலகியல் வரை ★ சிற்பங்கள் பேசுகின்றன

இடம்: **மறைக்கல்வி நடுநிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.**

(சி/3972)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22 - 01 - 1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.